**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 175/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.2 |
| Name | : | திரு. வேலுசாமி |
| Father's Name/Husband Name: | | திரு. முருகேசன் |
| Village | : | அயினார்பாளையம் |
| Taluk | : | வேப்பந்தட்டை |
| Age | : | 44/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரிகள் 2, 4 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 தங்கதுரையைத் தெரியும். தங்கதுரையின் தகப்பனார் கணேசன் மற்றும் தங்கதுரையின் மனைவி பரமேஸ்வரி ஆகியோரை தெரியும். எதிரிகள் அனைவரையும் தெரியும்.அ.சா.1 எதற்காக புகார் கொடுத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. சம்பவம் எதுவும் நான் விலக்கிவிடவில்லை. சம்பவத்தில் யார் யாருக்கும் காயம் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

தற்போது அ.சா.1, அவரது அப்பா கணேசன், அ.சா.1ன் மனைவி பரமேஸ்வரி ஆகியோர் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டனர். போலிசார் என்னை

விசாரித்தபோது, கடந்த 16.01.2022 அன்று மாலை 5 மணியளவில் அ.சா.1ன் வீட்டு முன்பாக எதிரிகள் அனைவரும் அ.சா.1ன் மனைவியை தகாத வார்த்தைகளால் பேசி, அது குறித்து கேட்ட அ.சா.1யை எதிரி ராமச்சந்திரன் மகன் சரவணன் தகாத வார்த்தைகளால் பேசி கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் தலையில் ஓங்கி அடித்தார் என்றும், அருகிலிருந்த எதிரி ராமச்சந்திரன் அ.சா.1ன் தொண்டையை பிடித்து நெறித்து, கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், எதிரிகள் ராணி மற்றும் பிரேமா ஆகியோர் அ.சா.1யை விளக்கமாற்றாலும், கையாலும் அடித்தார்கள் என்றும், தடுக்க வந்த அ.சா.1ன் அப்பா கணேசனை எதிரி சரவணன் தகாத வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், எதிரி ராமச்சந்திரன் அ.சா.1ன் மனைவியின் தலை முடியை பிடித்து இழுத்து சேலையை பிடித்து இழுத்து மானபங்க படுத்தினார் என்றும், எதிரிகள் ராமச்சந்திரன் மற்றும் சரவணன் ஆகியோர் கையில் வைத்திருந்த இரும்பு கம்பியை காட்டி கொலை மிரட்டல் விடுத்தனர் என்றும், அதனால் அ.சா.1 எதிரிகள் மீது புகார் மனு அளித்தார் என்றும், அதற்கு ஆதரவாக வாக்குமூலம் அளித்தேன் என்றும், தற்போது எதிரிகள் அ.சா.1 தரப்பினரும் சமாதானம் ஆகிவிட்டபடியால் அவர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.